[27th February 1964

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற வருஷம் இதே சமயத்தில்தான் உரப்பனூரில் தகராறு ஏற்பட்டு போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இப் போதும் மீன் பிடிப்பு சம்பந்தமாகத் தகராறுகள் இருப்ப தாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, போன வருஷம் மாதிரி நிகழ்ச்சிகள் ஏற்படாமல் இருக்க அரசாங்கம் இப்போதே தலையிட்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் நான் இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இதுவும் ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று நான் கூற விரும்புகிறேன். recent occurrence-ஆக இருக்க வேண்டும். ஆனால், இந்த விஷயம் ஒரு வருஷத்திற்கு முன்னால் நடந்தது. ஒன்றும் கவனிக்கவில்லை என்று சொல்லி ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டுவருவது கிடையாது. ஆனால், கனம் அங்கத்தினர் அவர்களுக்குக் குறிப்பிட விரும்பு கிறேன்—அரசாங்க அதிகாரிகள், கலெக்டர்கள் உட்பட இதிலே அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இரு கட்சிகளுக்கும் இடையே சமரசம் ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டிருக் கிறார்கள். ஆகவே, சென்ற ஆண்டு நடந்த சம்பவத்தை வைத்து தற்போது பிரேரணை கொண்டு வந்திருப்பது ஒத்தி வைப்புப் பிரேரணையின்கீழ் வராது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் இதை வற்புறுத்தவில்லை.

(4) FAILURE TO SUPPLY ADEQUATE RICE TO MADRAS CITY.

MR. SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an adjournment motion regarding the failure of the Government to take steps to make available adequate supply of rice to Madras City, resulting in sudden increase in cost of meals and other edibles in the City hotels.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, சென்னை நகரத்தில் இருக்கும் பல உபத்திரவங்களில் முக்கிய மான உபத்திரம் ஹோட்டல்களில் ஒரு சாப்பாட்டின் விலை ஏற்கனவே இருந்ததை விட 20 நயா பைசா, 30 நயா பைசா ஏறிவிட்டதாகும். சாப்பாட்டின் விலை அதிகமாகி விட்டதோடு தரமும் குறைந்து விட்டது. தற்போது ஹோட்டல்காரர்கள் விலையை ஏற்றிவிட்டார்கள். ஒரு சமயம் நாளைக்கு அரிசி விலை இறங்கினால் கூட ஹோட்டல்காரர்கள் விலையை இறக்கப் போவதில்லை. அரிசி தாராளமாகக் கிடைக்க வில்லை போன்ற பல காரணங்களைச் சொல்லி விலையை ஏற்றிவிட்டார்கள். இதனால் வெளியூரில் இருந்து வருகிற

27th February 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

வர்களும், மத்தியானம் ஹோட்டல்களில் சாப்பிடுகிறவர்களுக்கும் பெரிய கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இதுவும் ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல. இதிலே ஒரு விதி இருக்கிறது. "The motion must refer to a matter in which the responsibility of the Government is clearly involved."

கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ பத்திரிக்கையில் வருவதைப் பார்த்து விட்டும், ஹோட்டல்காரர்கள் சொல்வதை வைத்துக் கொண்டும் "failure of Government to supply rice to hotels" என்று ஒத்திவைப்புப் பிரேரணை கொடுத்திருக்கிறார்கள். (திரு. மீ. கலியாணசுந்தரம்: . . . அடிக்வேட் சப்ளை. .) அரிசி இருக்கிறது. நெல்லூர் அரிசிதான் வேண்டுமென்றால் சில சமயங்களில் இடைஞ்சல் ஏற்படுகிறது. ஹோட்டல்காரர்கள் விலையை உயர்த்தி விட்டால் அரசாங்க அதிகாரிகள் அதை விசாரிப்பார்கள். ஆனால் கனம் அங்கத்தினர் அவர்கள் 'உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யக்கூடாது' என்ற வகையில் அரசாங்கம் அரிசி சப்ளை செய்யாததன் காரணமாகத்தான் ஹோட்டல்காரர்கள் விலையை ஏற்றிவிட்டார்கள் என்று சொன்னால் சொல்லட்டும். ஆனால், இது ஒத்தி வைப்புப் பிரேரணையின் கீழ் வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, ஹோட்டல்காரர்கள் மீது என்ன நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் அதை நான் ஆட்சேபிக்கவில்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டார்கள் என்பதும் என்னுடைய குற்றச்சாட்டு. கனம் அமைச்சர் அவர்கள் எந்த ஒத்தி வைப்புப் பிரேரணை கொடுத்தாலும் அது விதியின் கீழ் வராது என்று கூறி விடுகிறார்கள். ஆகவே, கனம் அமைச்சர் அவர்களே ஒரு 'மாடல் அட்ஜர்ன்மெண்ட் மோஷன்' பிரேரேபித்தால் நலமாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

MR. SPEAKER: There is no case for admitting this adjournment motion. I withhold my consent.

III.—CALLING ATTENTION TO DAMAGES TO CROPS IN TIRUCHENDUR TALUK.

திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் சபாநாயகர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தில் பெய்த மழையின் காரணமாக வாழைக்கன்றுகள், தென்னங்கன்றுகள், இதர நன்செய், புன்செய்ப பயிர்கள் இவைகளுக்கு ஏற்பட்ட சேதாரங்கள் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.